ASAP
www.asaproject.org.uk
ASYLUM SUPPORT APPEALS PROJECT

## நாங்கள் யார்?

ASAP என்ற எங்கள் அமைப்பை, அகதிகளின் ~~ஆதரவுக்கான~~ மேல்முறையீட்டு ஆதரவுக்கான திட்டப்பணி என்று விரித்துக் கூறலாம். எங்களின் சிறிய தொண்டு நிறுவனம், அகதிகள் ஆதரவுச் சட்டத்தை அடித்தளமாகக்கொண்டு இயங்குகிறது. புகலிட ஆதரவு என்ற வகையில், புகலிடம் கோருபவர்களுக்கு, உள்துறை அலுவலகம்(Home Office) தங்குமிடமும் நிதியுதவிகளும் வழங்குகின்றது. உள்துறை அலுவலகம்(Home Office) மற்றும் அகதிகள் ஆதரவு தீர்ப்பாயம் ஆகியவற்றின் செயல்பாடுகளும், எங்களின் செயல்பாடுகளும் வெவ்வேறானவை. நாங்கள் செய்யும் காரியங்களில் ஒன்று, உள்துறை அலுவலகம்(Home Office), அகதிகளுக்கு ஆதரவளிக்க மறுக்கும்போதும், ஏற்கனவே அளிக்கும் ஆதரவைத் தொடராமல் கைவிடும்போதும், அதைப் பற்றிய வழக்குகளை, அகதிகள் ஆதரவுத் தீர்ப்பாயத்திற்குக் கொண்டு செல்லும்போது, அகதிகளுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குவதும், அவர்களின் பிரதிநிதிகளாச் செயல்படுவதுமாகும்.

நாங்கள் சிறிய தொண்டு நிறுவனம் என்பதால், **எங்களிடம் புகாரளிக்க வரும் அகதிகள் எல்லோருக்கும் பிரதிநிதிகளாக எங்களால் செயல்பட முடிவதில்லை.** எங்களால் முடிந்தவரை, அதிகமான மக்களுக்குப் பிரதிநிதிகளாக செயல்பட முயல்கிறோம். உங்களின் பிரதிநிதியாக எங்களால் செயல்பட இயலவில்லை என்றால், உங்கள் விசாரணைக்கு முன்பாகவே அது பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்திவிடுவோம்.

தஞ்சம் கோருபவர்களின் புகலிடம் கோரிக்கைகள் அல்லது அவர்களின் குடிவரவு விடயங்களால் நாங்கள் பிரதிநிதிகளாக செயல்படுவதில்லை என்பதை தயவுசெய்து கவனிக்கவும். ஆனால், நாங்கள், புகலிடக் கோரிக்கை மேல்முறையீட்டு விண்ணப்பங்களில் மாத்திரம் நாங்கள் அவர்களுக்கு உதவ முடியும்.

Asylum Support Appeals Project, Studio 11/12, Container City Building,
48 Trinity Buoy Wharf, London, E14 OFN
tel: 020 3716 0284 |fax: 020 3716 0272 | www.asaproject.org
email: referrals@asaproject.org.uk
Company registered in England and Wales number 04763838 | Registered charity number 1105625
For more information about how we use your data, please read our Privacy Notice: www.asaproject.org/privacy

## உங்கள் பிரதிநிதியாக நாங்கள் செயல்பட எங்களிடம் கேட்பது எப்படி?

எங்களுக்கு விண்ணப்பிக்க யாரேனும் உதவியாக இருந்தால், எங்கள் பரிந்துரை மற்றும் அதிகாரப்பூர்வப் படிவத்தைப் பூர்த்திசெய்ய உதவுமாறு அவரிடம் கேளுங்கள். இந்த வகையான ஆதரவுக்கு விண்ணப்பிக்க, உங்களுக்கு யாரும் உதவவில்லை என்றால், எங்கள் வலைத்தளமான www.asaproject.org/contact/referrals இல் கிடைக்கும் அதிகாரப்பூர்வப் படிவத்தைப் பூர்த்திசெய்து, கையொப்பமிட்டு, உங்களுக்கு நீங்களே பரிந்துரைத்துக் கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட படிவத்தைக் கையெழுத்திட்டு, referrals@asaproject.org.uk என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாக அனுப்பவும்.

## உங்களின் பிரதிநிதியாக நாங்கள் செயல்பட்டால், என்ன நிகழும்?

உங்களின் பிரதிநிதியாக நாங்கள் செயல்படப் போகிறோம் என்றால், எங்கள் பிரதிநிதி ஒருவர், நீங்கள் தீர்ப்பாயத்திற்கு வரும்போது உங்களைச் சந்திப்பார். விசாரணை நடப்பதற்குக் குறைந்தபட்சம் ஒருமணி நேரத்திற்கு முன்பாக, நீங்கள் தீர்ப்பாயத்திற்கு வந்திருக்க வேண்டும். அப்போது எங்கள் பிரதிநிதி, உங்கள் வழக்கை நன்கு புரிந்துகொள்வதற்காக, உங்களிடம் சில கேள்விகளைக் கேட்பார். சில நேரங்களில், இந்தக் கேள்விகள் தனிநபர் சார்ந்தவையாக இருப்பதோடு, அவை மிகவும் விரிவாகவும், உங்கள் நிதியியல் தொடர்பான தகவல்களைப் பற்றியவையாகவும், உங்களுக்கு நீங்களே எப்படி உதவிக் கொள்கிறீர்கள் என்பதைப் பற்றியவையாகவும் இருக்கலாம். இந்தக் கேள்விகளுக்குக் காரணம், மேல்முறையீட்டின்போது உங்களுக்கு வெற்றிகரமான வாய்ப்பை வழங்குவதே ஆகும். ஏனெனில், நீதிபதியும், உள்துறை அலுவலகப் பிரதிநிதியும்(Home Office representative) என்ன மாதிரியான கேள்விகளைப் கேட்பார்கள் என்பது, உங்கள் பிரதிநிதிக்குத் தெரியும். இந்தக் கேள்விகளை முன்கூட்டியே உங்களிடம் கேட்பதன் மூலம், நீங்கள் விசாரணைக்குத் தயாராவதோடு, உங்கள் பிரதிநிதியும் வழக்கிற்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கிறார்.

Asylum Support Appeals Project, Studio 11/12, Container City Building,
48 Trinity Buoy Wharf, London, E14 OFN
tel: 020 3716 0284 |fax: 020 3716 0272 | www.asaproject.org
email: referrals@asaproject.org.uk
Company registered in England and Wales number 04763838 | Registered charity number 1105625
For more information about how we use your data, please read our Privacy Notice: www.asaproject.org/privacy

எப்போதாவது ஒரு முறை, உங்களைச் சந்தித்து, உங்கள் வழக்கு முழுவதையும் ஆராய்ந்த பிறகு, நாங்கள் உங்களின் பிரதிநிதியாகச் செயல்படாமல் இருப்பது, உங்களுக்கு நல்லது என்பதை நாங்கள் முடிவுசெய்வோம். அப்போது நீங்களே உங்களைப் பிரதிநிதிப்படுத்துமாறு கூறுவோம். இவ்வாறு நடந்தாலும்கூட, உங்கள் விசாரணைக்கு முன்பாகவும், விசாரணைக்குப் பிறகும் உங்களுக்கு நாங்கள் அறிவுரை வழங்குவோம்.

உங்கள் பிரதிநிதியை முதலில் நீங்கள் சந்திக்கும்போது, ASAPஐ உங்களுக்காக பிரதிநிதியாக செயல்பட விரும்புகிறீர்கள் என்பதற்காக, ஒரு படிவத்தில் கையெழுத்திட வேண்டும். **உங்கள் அனுமதியைக் கொடுத்து, இந்தப் படிவத்தில் கையொப்பமிடாத பட்சத்தில், உங்கள் பிரதிநிதியாக எங்களால் செயல்பட முடியாது.**

எதிர்காலத்தில் ASAP உங்களைத் தொடர்பு கொள்வதற்கான ஒப்புதலை வழங்கவும், உங்களைப் பற்றிய அல்லது உங்கள் குடும்பத்தினர் பற்றிய வழக்கு விவரங்களை உள்துறை அலுவலகத்துடன்(Home Office) பகிர்ந்துகொள்வதை ஒத்துக்கொள்வதையும் உறுதிப்படுத்த, அந்தப் படிவத்தில் இரண்டு தேர்வுப் பெட்டிகள் இருக்கும். அவற்றைத் தேர்வுசெய்வதன் மூலம், அகதிகள் தொடர்பான ஆதரவு விஷயத்தில் கொள்கைகளை உருவாக்கவும், நல்ல முடிவுகளை எடுக்கவும் நீங்கள் உதவ முடியும். உங்கள் பிரதிநிதியாக செயல்படவைக்கவேண்டும் என்ற காரணத்திற்காக இந்தக் கூடுதல் பெட்டிகளைத் **தேர்வுசெய்ய வேண்டிய அவசியமில்லை**. அவற்றைத் தேர்வுசெய்வது முற்றிலும் உங்கள் விருப்பத்தைச் சார்ந்ததே ஆகும். நீங்கள் அவற்றைத் தேர்வுசெய்யவில்லை என்றாலும், **நாங்கள் உங்கள் பிரதிநிதியாகச் செயல்படுவோம்.** எதிர்காலத்தில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், referrals@asaproject.org.uk என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொண்டு, நீங்கள் வழங்கியுள்ள ஒப்புதல்களை திரும்பப் பெறலாம்.

Asylum Support Appeals Project, Studio 11/12, Container City Building,
48 Trinity Buoy Wharf, London, E14 OFN
tel: 020 3716 0284 |fax: 020 3716 0272 | www.asaproject.org
email: referrals@asaproject.org.uk
Company registered in England and Wales number 04763838 | Registered charity number 1105625
For more information about how we use your data, please read our Privacy Notice: www.asaproject.org/privacy